**செய்தி வெளியீடு எண்: 283** **நாள் : 11.06.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று **(11.6.2016)** தலைமைச் செயலகத்தில், மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் சார்பில் **7.6.2016** அன்று புது டெல்லியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை–க்கு வழங்கப்பட்ட "National Excellence Awards 2016 for Roof Top Solar Power Projects in the General Category States Award" விருது, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கப்பட்ட "National Excellence Awards 2016 for Roof Top Solar Power Projects in the DISCOM - Own Installation Category" விருது ஆகியவற்றை மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்வின்போது, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – **9.**